முருகப்பெருமான் துணை

**மகான் சத்யானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.06.2023, சனிக்கிழமை

1. அறமாக கலியுக மக்களை
அணைத்து வழிநடத்தும் ஞானி
வரமாக இப்புவிக்கு கிடைத்திருக்க
வணங்கி கலியுக மக்கள்
2. மக்களெல்லாம் அரங்க மகானை
மனதாற ஏற்று வருதலுற
தேக்கமின்றி ஞானம் சித்திக்குமென
தெரிவித்து சத்யானந்தர் யானும்
3. யானும் அறிவுரை ஆசிதனை
உயர்வான சோபகிருது மிதுனதிங்கள்
ஞானம்பட உபயதிகதி காரி வாரம்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 02 ம் நாள், 17.06.2023, சனிக்கிழமை)
ஞானம்பெற மக்களுக்கு உரைப்பேன்
4. உரைக்கவே அவதாரம் எடுத்து
உலகமாற்றம் நிகழ்த்திட
மறைபோற்றும் வள்ளலாய் வந்த
மகான் அரங்கன் நோக்கம்
5. நோக்கம் உலகறியப்பட வேண்டும்
நிலமதனில் அரங்கன் தருமம்
தேக்கமின்றி உலகம் எங்கிலும்
தொடர வேண்டும் தடைபடா
6. தடைபடா அரங்கன் உபதேசம்
தவம் போல அனைவருக்கும்
இடையிடை ஞானமாகப் பரப்பி
எல்லோருக்கும் நன்மை கிட்டும்படி

7. கிட்டும்படி வழிவகை செய்து
கேட்காமலே அவரவர் குறைகள்
கட்டம்தனை போக்கும் வரமும்
கருணைபட அரங்கன் தீட்சையால்
8. தீட்சையால் அடைதல் வேணும்
தேடி அரங்கன் தொண்டின்
மாட்சிமை மகிமை அறிந்து
மக்கள் ஒன்றிணைய வேண்டும்
9. வேண்டி வேலவன் வழிபாடே
விடியல் என உணர்ந்து
கொண்டுரைப்பேன் சரவண சோதி
குடியவரோடு ஏற்றி அவரவரும்
10. அவரவரும் வழிபாடு செய்திட
அகசோதி எழும்பித் தெளிவும்
அவதார ஞானி யாரெனவும்
ஆறுமுகனே அரங்கனாய் வந்த
11. வந்த சூட்சுமம் விளங்கி
வருபவர்க்கு வாசி ஒடுங்கி
முந்தை வினை அழிய முழுமை கிட்டும்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—